**நம்பியூர் வட்டாரத்தில் கரும்புப் பயிரில் துல்லிய பண்ணையத் திட்டம்**

First Published : 13 Jul 2010 08:57:42 AM IST

கோபி, ஜூலை 12: நம்பியூர் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (என்.ஏ.டி.பி) கரும்புப் பயிரில் துல்லிய பண்ணையம் அமைக்க, வேளாண்மை துறை மற்றும் கரும்பு ஆலைகளுடன் இணைந்து செயல்படுத்த இலக்கு 20 எக்டர் வழங்கப்பட்டுள்ளது. ÷எனவே, உடனடியாக விவசாயிகள் வேளாண்மை அலுவலர், வேளாண்மைத் துணை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் நம்பியூர் ஆகியோருடன் தொடர்புக் கொண்டு அரசு மானியம் 65 சதவீதத்தை பெற்று பயனடையுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் நம்பியூர் (பொ) சி.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**சின்ன வெங்காயத்தில் அழுகல் நோய்: கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 12 Jul 2010 11:23:31 AM IST

Last Updated : 12 Jul 2010 01:13:05 PM IST

தருமபுரி, ஜூலை 11: சின்ன வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயை கட்டுப்படுத்துவது குறித்து தருமபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் துரைசாமி விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில், தற்போது பயிரிடப்பட்டுள்ள சிறிய வெங்காயத்தில் அழுகல் நோய்த் தாக்குதல் தெரிகிறது. இது ப்யூசேரியம் ஆக்சிஸ்போரம் எனும் பூஞ்சை மூலமாக ஏற்படுகிறது. நோய்த் தாக்கிய விதைக் காய்களை நேர்த்தி செய்யாமல் நடுவதால், இந்நோய் அதிகளவு ஏற்படும்.

நிலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் இந்த பூஞ்சையின் தாக்குதல் அதிகமாக இருக்கும். எனவே, வெங்காய வயலுக்கு குறிப்பிட்ட இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

அதாவது, நிலம் நன்கு காய்ந்த பிறகு நீர்ப் பாய்ச்ச வேண்டும். ஈரத்தன்மை இருக்கும் போது, நீர்ப் பாய்ச்சுவதைத் தவிர்க்க வேண்டும். களிமண் பாங்கான நிலங்களில் 7 முதல் 9 நாள்களுக்கு ஒரு முறையும், மணல் பாங்கான நிலங்களில் 5 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்சினால் போதுமானது.

அழுகல் நோய்த் தாக்கிய வெங்காயத் தாள்கள் மஞ்சள் நிறமாக மாறி இருக்கும். நோய் முற்றிய நிலையில் தாள்கள் நேராக இல்லாமல், துவண்டு போய் காணப்படும்.

செடியைப் பிடுங்கிப் பார்த்தால், காயின் வேர் தோன்றும் பாகம் அழுகி நைந்து போனது போல தோன்றும். இந்நோய் தோன்றிய செடிகளை உடனடியாக பிடுங்கி அழித்துவிட வேண்டும். இல்லையெனில், மற்ற செடிகளுக்கும் பாதிப்பை உண்டாக்கும்.

அழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்:

10 லிட்டர் நீருக்கு கார்பென்டாசிம் பூஞ்சாணக் கொல்லி 10 கிராம் மற்றும் ஸ்டிரெப்டோமைசீன் சல்பேட் 2 கிராம், ஒட்டும் திரவம் 5 மில்லி என்ற வீதத்தில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் வயலில் தெளிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

**இயற்கை பண்ணை விவசாயிகளுடன் ஆட்சியர் கலந்துரையாடல்**

First Published : 12 Jul 2010 11:53:10 AM IST

Last Updated : 12 Jul 2010 01:08:39 PM IST

நாகர்கோவில், ஜூலை 11: கன்னியாகுமரி மாவட்ட இயற்கைப் பண்ணை விவசாயிகளுடன் ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார்.

நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் சிங்கப்பூரை சேர்ந்த
பவானி பிரகாஷ் பங்கேற்று இயற்கை விவசாயம் குறித்தும், குப்பையிலிருந்து என்சைம் தயாரிக்கும் முறைகள் குறித்தும் விவரித்தார்.

இந்த என்சைம் விவசாயத்துக்கு உரமாகவும், பூச்சிக் கொல்லி மருந்தாகவும், பயிற் வளர்ச்சி ஊக்கியாகவும், கிருமி நாசினியாகவும், வீட்டை சுத்தம்செய்யவும் பயன்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

வரும் 1.1.2011 முதல் குமரி மாவட்டம் இயற்கை விவசாயம் மட்டுமே செய்யப்படும் மாவட்டமாக ஆக்கப்படும் என்றும், அதற்கான இயற்கைப் பண்ணையம் சார்ந்த பயிற்சிகள் வரும் ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை நடைபெறும் என்றும் ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தெரிவித்தார்.

பஞ்சகவ்யா தயாரித்து உபயோகப்படுத்துவது குறித்து இயற்கை விவசாயி அழகப்பபுரம் ஹென்றி விளக்கினார். பழக்காடி தயாரித்து பயன்படுத்தும் முறைகள் குறித்து திருவட்டார் விவசாயி மிக்கேல் விளக்கினார்.

இயற்கை பண்ணையத்துக்கு முக்கியமாக தேவைப்படும் கால்நடைகளுக்கான வைக்கோலை வெளிமாநிலங்களுக்கு அனுப்புவதை தடை செய்ய வேண்டும் என்று நஞ்சில்லா வேளாண்மை சங்கத் தலைவர் டி. தாஸ் கோரிக்கை விடுத்தார்.

இயற்கை விவசாயத்துக்கு தேவையான கால்நடைகளை அரசு மானியத்தில் வழங்க வேண்டும் என்று கன்யா மண்புழு உர உற்பத்தியாளர் சங்கத்தை சேர்ந்த சிசில் தெரிவித்தார்.

வேளாண்மை துணை இயக்குநர் நாகமணிபிள்ளை உள்ளிட்ட அலுவலர்களும் பங்கேற்றனர்.

கிள்ளியூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் என். இளங்கோ வரவேற்றார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் டி.சி. கண்ணன் நன்றி கூறினார்.

**பயிர் மதிப்பீடு, வேளாண் காப்பீட்டு திட்ட பயிற்சி முகாம்**

First Published : 12 Jul 2010 12:40:04 PM IST

Last Updated : 12 Jul 2010 01:07:03 PM IST

அம்பாசமுத்திரம், ஜூலை 11: அம்பாசமுத்திரத்தில் பயிர் மதிப்பீடு மற்றும் வேளாண் காப்பீட்டு திட்டம் குறித்த சிறப்பு பயிற்சி முகாம் 2 தினங்கள் நடைபெற்றன.

அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற இப் பயிற்சி முகாமுக்கு வேளாண் உதவி இயக்குநர் சி. மகாலிங்கம் தலைமை வகித்தார். இதில், களப்பணி குறித்த பயிற்சி, களம் தேர்வு செய்தல், திடல் அமைத்தல் குறித்த செய்முறை பயிற்சி போன்றவை அளிக்கப்பட்டன.

துணை வேளாண் இயக்குநர் துரைபாண்டியன் முகாமை தொடங்கி வைத்தார். நெல் ஆராய்ச்சி மைய இயக்குநர் சுந்தரம் வாழ்த்தி பேசினார்.

திருநெல்வேலி மாவட்ட புள்ளியியல்துறை உதவி இயக்குநர் சீனிவாசன், பயிர் மதிப்பீட்டு ஆய்வு மற்றும் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்வது குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை விளக்கினார்.

தேசிய மாதிரி ஆய்வு நிறுவன கண்காணிப்பாளர் செல்வராஜ், சேரன்மகாதேவி கோட்ட புள்ளியியல் அலுவலர் முத்துகுருநாதன் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

இம்முகாமில் வேளாண் அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், கோட்டப் புள்ளியியல் அலுவலர்கள், வட்டார புள்ளியியல் ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் ராமசாமி நன்றி கூறினார்.

**கரிம விவசாயக் கூட்டமைப்பு விழிப்புணர்வுக் கூட்டம்**

First Published : 12 Jul 2010 10:57:15 AM IST

செங்கல்பட்டு, ஜூலை 11: செங்கல்பட்டு கரிம விவசாய கூட்டமைப்பு மற்றும் சென்னை-செங்கைப் பிரிவு தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம் ஆகியன இணைந்து நடத்திய இயற்கை விவசாய அனுபவப் பகிர்வு மற்றும் மாணவர் விழிப்புணர்வுக் கூட்டம் ஆகியன சனிக்கிழமை திருப்போரூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

÷உலக வங்கி வேளாண் ஆலோசகர் சீனு. சித்தாந்தம் தலைமை வகித்தார்.
÷உலக வங்கி வேளாண் ஆலோசகர் முனைவர் கண்ணையன், திருப்போரூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயபாலன், ஆலத்தூர் ஆர்கிட் நிறுவன பொது மேலாளர் ஜி.ரமேஷ், வனச்சரக அலுவலர் எம்.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ÷திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் மா.கேசவன், கரிம விவசாயக் கூட்டமைப்பின் தலைவர் அரியனூர் ஜெயசந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.
÷முன்னதாக சுற்றுசூழல் பாதுகாப்பு சங்க் செயற்குழு உறுப்பினர் எஸ். தனபால் வரவேற்றார். சென்னை-செங்கை சுற்றுச்சூழல் நிறுவனத் தலைவர் அரு.சோலையப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.
÷பள்ளிக் கல்வி இணை இயக்குனர் தர்ம ராஜேந்திரன், விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினார்.

**மண், நீர் பரிசோதனை முகாம்**

First Published : 12 Jul 2010 12:28:42 PM IST

கரூர், ஜூலை 11: கரூர் மாவட்டத்தில் நடமாடும் மண், நீர் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.
இதுகுறித்து நடமாடும் மண் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் வெ. உமாமகேஸ்வரி வெளியிட்டுள்ள அறிக்கை:
விவசாயத்திற்கு ஆதாரமாக உள்ளது மண். இதன் தரம் மற்றும் அதிலிலுள்ள சத்துகள் குறித்து நன்கு அறிந்த பின், விவசாயம் செய்தால் அதிக மகசூலைப் பெற முடியும். இதேபோல, நீரின் தன்மை குறித்தும் விவசாயிகள் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பது நலம்.
இவ்வாறு, மண், நீரை பரிசோதனை செய்து கொள்ள, மாவட்ட நிர்வாகம் சார்பில் பரிசோதனை நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், வேளாண் துறை மூலமாக நடமாடும் மண் மற்றும் நீரி பரிசோதனை நிலையங்களும் உள்ளன.
இப் பரிசோதனைகளின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில் நீர், மண் பரிசோதனை முன்பருவ முகாம்கள் கரூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி வட்டாரங்களில் நடத்தப்படவுள்ளன. இதன்படி, ஜூலை 15 ஆம் தேதி தண்ணீர்பந்தலில் மாலை 4 மணிக்கும், 16 ஆம் தேதி மாலை 4 மணிக்கு கொடையூரிலும் இந்த முகாம் நடத்தப்படுகிறது.
விவசாயிகள் இந்த முகாமைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார் அவர்.

**தேசிய விவசாயிகள் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும்**

First Published : 12 Jul 2010 12:31:12 PM IST

தஞ்சாவூர், ஜூலை 11: தேசிய விவசாயிகள் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஆறுபாதி கல்யாணம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது வங்கிகள் விவசாயிகள் பெறும் ரூ. 3 லட்சம் வரையிலான விவசாயக் கடன்களுக்கான வட்டியை அண்மையில் 9 சதத்தில் இருந்து 7 சதமாகக் குறைத்தன. தவணை தவறாமல் கடனைத் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு கூடுதலாக ஒரு சதம் வட்டிச் சலுகை அளிக்கப்பட்டது.

ஆனால், இந்த நடைமுறைகளால் விவசாயிகளுக்கு பெரும் லாபமில்லை என்பதை சுட்டிக்காட்டி எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையம், அனைத்து வங்கிகளிலும் விவசாயக் கடனுக்கான வட்டியை 4 சதமாக்க பரிந்துரைத்தது.

அதிகரித்து வரும் விலைவாசி உயர்வால் வேளாண்மை பாதிக்கப்பட்டு வருகிறது. விவசாயி உற்பத்தி செய்யும் பொருளுக்கு, உற்பத்திச் செலவைவிட கூடுதலாக 50 சதம் லாபம் வைத்து விலை நிர்ணயிக்கவும் ஆணையம் பரிந்துரைத்தது. மேலும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை எளிமைப்படுத்தி அனைத்து விவசாயிகளும் பயன்பெறவும் ஆணையம் பரிந்துரைத்தது. ஆனால், இந்தப் பரிந்துரைகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

2008-ம் ஆண்டு அப்போதைய மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அறிவித்த கடன் நிவாரணத் திட்டத்தில் ஐந்து ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்திருக்கும் விவசாயிகளை சிறு, குறு விவசாயிகள் என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களை இதர விவசாயிகள் என்றும் பிரித்தனர். கடன் நிவாரணத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு முழுச் சலுகையும், இதர விவசாயிகள் தங்களின் கடனில் 75 சதம் செலுத்தினால் 25 சதம் சலுகை என்றும் அறிவிக்கப்பட்டது.

இது விவசாயிகளைப் பாகுபடுத்தும் பாரபட்ச நடவடிக்கை. இதைக் கைவிட்டு அனைவருக்கும் சமமான சலுகையை அறிவிக்க வேண்டும். ஜப்தி என்ற பெயரில் டிராக்டர்களை பறிமுதல் செய்வதைத் தடுக்க வேண்டும். பண்ணை இயந்திரங்களுக்கு 4 சதத்துக்கு மேல் வட்டி விதிக்கக் கூடாது. விவசாயிகள் பலர் தற்கொலை செய்து வருகின்றனர். இதை தேசிய அவமானமாகக் கருதி விவசாயிகளின் வாழ்க்கை பாதுகாப்பை உறுதிசெய்தால்தான் நாடு முன்னேறும் என்பதை மத்திய அரசு உணர வேண்டும். விவசாயிகளின் பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டால், மத்திய அமைச்சர்களை முற்றுகையிட்டு கோரிக்கைகளை வலியுறுத்துவதைத் தவிர வழியில்லை என்றார் அவர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

First Published : 13 Jul 2010 09:10:36 AM IST

மேட்டூர், ஜூலை 12: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 4 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரியின் துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு ஆகிய ஆறுகள் உள்ளன. இந்த ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை மேட்டு0ர் அணைக்கு விநாடிக்கு 2,269 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த தண்ணீர், திங்கள்கிழமை மாலை விநாடிக்கு 3,966 கன அடியாக அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 80 அடியாக உயர்ந்தது. குடிநீர் தேவைக்கு விநாடிக்கு 1,003 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 41.95 டி.எம்.சி.யாக இருந்தது.

**செம்மை நெல் சாகுபடியில் அதிக விளைச்சல்: விவசாயிக்கு பரிசு**

First Published : 13 Jul 2010 09:01:31 AM IST

திருச்செங்கோடு, ஜூலை 12: பள்ளிப்பாளையம் ஒன்றியத்தில் செம்மை நெல் சாகுபடித் திடல் அமைத்து அதிக விளைச்சல் பெற்ற விவசாயிக்கு மத்திய அமைச்சர் காந்திச்செல்வன் பரிசு வழங்கினார்.

÷ஆத்மா திட்டத்தின் கீழ கடந்த வருடம் தெற்குபாளையத்தைச் சேர்ந்த விவசாயி நடனசபாபதி செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத் திடல் அமைத்து ஒரு ஏக்கரில் 61 மூட்டை நெல் மகசூல் எடுத்தார். குறைந்த விதை, ஒரு நாற்று நடவு, சதுர நடவு, கோனோவீடர் பயன்பாடு, உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் ஆகிய தொழில் நுட்பங்களை பின்பற்றி அவர் இந்த சாதனையைச் செய்துள்ளார்.

÷அவருக்கு ரூ.4 ஆயிரத்திற்கான காசோலையை மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் சனிக்கிழமை வழங்கினார். ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பாலு, குப்பாண்டபாளையம் ஊராட்சித் தலைவர் வேல்முருகன், வேளாண் உதவி இயக்குனர் முரளீதரன் உடனிருந்தனர்.

**பாசிப் பயறு சாகுபடி தொழில்நுட்ப வயல் விழா**

First Published : 13 Jul 2010 09:00:38 AM IST

நாமக்கல், ஜூலை 12: நாமக்கல்லை அடுத்த புதுச்சத்தரத்தில் பாசிப் பயறு சாகுபடி தொழில்நுட்ப வயல் விழா நடந்தது.

÷நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், புதுச்சத்திரம் வட்டாரத்துக்குட்பட்ட தாத்தையங்கார்பட்டி, காரைக்குறிச்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கு பாசிப் பயறு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிக்காக வம்பன்-2 விதையானது செயல் விளக்கத்துக்காக வழங்கப்பட்டது.

÷இந்த வகை ரகமானது கோ 6, கே 851 ரகங்களுடன் ஒப்பிடுகையில் மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
÷ மேலும், செடி ஒன்றுக்கு 40 முதல் 60 வரையிலான திரட்சி காய்களுடன் ஏக்கருக்கு 350 கிலோ முதல் 400 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.
புதுச்சத்திரம் வட்டாரத்தில் கோடை மழை சீராக இருக்கும் தருணத்தில் இத்தகைய ரகத்தை பயிரிடுவதன் மூலம் ஏக்கருக்கு ரூ. 10 ஆயிர் முதல் 15 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கும்.
÷இதன்படி வம்பன் 2 ரகம் பயிரிட்டுள்ள விவசாயி பி. குமாரசாமி என்பவருக்கு சொந்தமான தாத்தையங்கார்பட்டி கிராம வயலில் வயல் விழா திங்கள்கிழமை நடந்தது.
இதர விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் நடத்தப்பட்ட இந்த விழாவில், வேளாண் இணை இயக்குநர் ஆ. பிரபாகரன், வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ப. மோகன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

**ரூ.5.60 லட்சத்துக்கு கருப்பட்டி விற்பனை**

First Published : 13 Jul 2010 08:56:30 AM IST

கோபி,ஜூலை 12: குன்னத்தூர் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தில் ரூ. 5,60  லட்சத்துக்கு கருப்பட்டி விற்பனை ஆனது.
÷ஈரோடு மாவட்டம், நம்பியூர் அருகே உள்ள குன்னத்தூரில் கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம் செயல்பட்டு வருகிறது. இந்த கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தில் வாரந்தோறும் திங்கள்கிழமை கருப்பட்டி ஏலம் விற்பனை நடைபெறும்.
÷திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 13 ஆயிரம் கிலோ தென்னங் கருப்பட்டி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. 10 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.391க்கு விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் ரூ.5 லட்சத்து 8,300 க்கு விற்பனை செய்யப்பட்டது.
÷இதே போல்,÷1000 கிலோ பனங் கருப்பட்டி விற்பனைக்கு வந்தது. 10 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.571க்கு விற்பனை ஆனது. பனங் கருப்பட்டி மொத்தம் ரூ.51 ஆயிரத்து 200 க்கு விற்பனை ஆனது. தென்னை மற்றும் பனங் கருப்பட்டி  ரூ.5 லட்சத்து 59 ஆயிரத்து 500 க்கு விற்பனை ஆனது.
÷ தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு சம்மேளன சங்கத்தில் இருந்து உடன்குடி பனங் கருப்பட்டியும், ராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி சம்மேளன சங்கத்தில் இருந்து வேம்பாடு கருப்பட்டி மொத்தம் 7000 கிலோ விற்பனைக்கு வந்திருந்தது.
÷குன்னத்தூர் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்துக்கு கோபி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் கருப்பட்டியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

÷பெருந்துறை திருப்பூர், தாராபுரம், கோவை, பொள்ளாச்சி, காங்கேயம், வெள்ளக்கோவில், மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கருப்பட்டிகளை வாங்கிச் சென்றனர்.

÷இந்த தகவலை கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தின் தனி அதிகாரி கருணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# தினமலர்

**ஐசோபார்ம் எண்ணெய்வித்து திட்ட பயிற்சி**

திட்டக்குடி: பெண்ணாடம் அடுத்த திருமலை அகரம் கிராம விவசாயிகளுக்கு நல்லூர் வட் டார வேளாண்மைத் துறை சார்பில் ஐசோபார்ம் எண்ணெய்வித்து திட்டத்தின் கீழ் இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. நிறைவு நாள் முகாமிற்கு வேளாண் உதவி இயக்குநர் அப்பன்ராஜ் தலைமை தாங்கினார். வக்கீல் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் கதிரவன் வரவேற்றார். இதில் அசோஸ் பைரில்லம், பாஸ்போ - பாக்டீரியா, சூடோமோனாஸ் விதை நேர்த்தி, கோனோ வீடர்க ளை எடுக்கும் கருவி குறித்து கருத்து கண்காட்சியும், செயல்விளக்க பயிற்சியும் அளிக்கப்பட்டது. துணை வேளாண் அலுவலர் பரமசிவம் விளக்கமளித்து பேசினார். துவக்க நாளில் கடலூர் தொழில்நுட்ப அலுவலர் சாலமன் பயிற்சியளித்தார். முகாமில் பாசன சங்கத் தலைவர் ஆறுமுகம், விவசாய கூட்டு பொறுப்புக் குழு தலைவர் கோவிந்தசாமி, முன்னோடி விவசாயி அருள், அனிதா உட்பட 50 விவசாயிகள் பங்கேற்றனர்.

**16 ஆயிரம் ஹெக்டேர் பயறுவகை சாகுபடிக்கு இலக்கு : கலெக்டர் தகவல்**

புதுக்கோட்டை: ""புதுக்கோட்டை மாவட்டத்தில் பயறு வகைகளில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், இந்தாண்டு 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் பயறுவகை சாகுபடிக்கு வேளாண்மைத்துறை இலக்கு நிர்ணயித்துள்ளது,''என புதுகை கலெக்டர் சுகந்தி பேசினார்.புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் பயறுவகை ஆராய்ச்சி மையத்தில், காரீப் முன் பருவத்துக்கான பயறுவகை சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது.

கருத்தரங்கை துவக்கி வைத்து புதுகை கலெக்டர் சுகந்தி பேசியதாவது:புதுக்கோட்டை மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் நெல், பயறுவகை மற்றும் சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், விவசாயிகளின் பொருளாதாரத்தை

மேம்படுத்தும் விதமாகவும் காரீப் முன்பருவ பயறு இயக்கத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.பயறு வகைகளை பொறுத்தமட்டில் நமது அன்றாட உணவில் ஓர் அங்கமாக உள்ளது. உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் தேவையான புரதச்சத்து அதிகம் உள்ளதால் பயறு வகைகளை நாம் அனைவரும் பயன்படுத்துகிறோம். இயற்கை இடர்பாடுகள், வேளாண் நடைமுறைகள் போன்றவற்றால் எளிதாக கிடைத்துக் கொண்டிருந்த பயறு வகைகள் தற்போது அரிதாகிவிட்டது.நமது சந்ததியினருக்கு புரதம் நிறைந்த பயறுவகைகள் எளிதாக கிடைப்பதற்கான வழிவகைகள் செய்வது நம் ஒவ்வொருவரது கடமை.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் விலைவாசி உயர்வை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர விவசாயிகள் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.புதுக்கோட்டை மாவட்டம் பயறுவகைகளின் களஞ்சியமாக திகழ்கிறது. இம்மாவட்ட விவசாயிகள் பெரும்பாலும் ஊடுபயிராகவே துவரை பயிரினை சாகுபடி செய்கின்றனர். துவரைப் பயிரினை தனிப் பயிராக சாகுபடி செய்வதன் மூலம் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு துவரை சாகுபடி செய்வதுக்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

பயறுவகை சாகுபடியை அதிகரிக்கும் விதமாக விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஐந்தாயிரம் ரூபாய், நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் இரண்டாயிரத்து 500 ரூபாய் மானியம் வழங்கப்படும். தேசிய உணவு பாதுகாப்பு குழும பயறு திட்டம் மற்றும் விதை கிராம திட்டத்தின் கீழ் பயறு விதைகள், நுண்ணூட்ட சத்து, உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட உள்ளது.மாவட்டம் முழுவதும் இந்தாண்டு பயறு வகை பயிர்களின் சாகுபடியை 16 ஆயிரம் ஹெக்டேராக அதிகரிக்கவும், ஒரு ஹெக்டேருக்கு 625 கிலோ மகசூல் பெறவும் ஏதுவாக செயலாக்கப் பணிகள் துவங்க உள்ளது.

காரீப் முன்பருவத்தில் துவரை ஆயிரத்து 350 ஹெக்டேரிலும், உளுந்து மூன்றாயிரத்து 450 ஹெக்டேரிலும், பாசிப்பயறு 100 ஹெக்டேரிலும், கொள்ளு 200 ஹெக்டேரிலும், இதர பயறு வகைகள் ஆயிரத்து 500 ஹெக்டேரிலும் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு பேசினார்.வேளாண் துறை இணை இயக்குனர் ராஜூ, மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் பழனிவேலு, விதை சான்று உதவி இயக்குனர் அண்ணாமலை, பயறு வகை ஆராய்ச்சி மைய பேராசிரியர் சுந்தர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்ற விவசாயிகள் தீர்மானம்**

ஈரோடு: பெரும்பள்ளம், கீழபவானி வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.ஈரோட்டில் தமிழக விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். மாநில தலைவர் ரத்தினசாமி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் சுப்பு, பொறுப்பாளர் லட்சுமணன், அமைப்பு செயலாளர் கண்ணையன் உட்பட பலர் பங்கேற்றனர்.ஈரோட்டில் அரசு புறம்போக்கு நிலத்தை சி.எஸ்.ஐ., நிர்வாகம் ஆக்கிரமித்துள்ளது.

மாவட்ட நிர்வாகம் நிலத்தை மீட்டு, இரண்டு ஏக்கர் நிலத்தை இயற்கை விலைபொருட்கள் விற்கும் அங்காடி அமைக்க விவசாய சங்கத்துக்கு ஒப்படைக்க வேண்டும். பெரும்பள்ளம் பாசன கால்வாயை ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மதகுகளை சீரமைத்து, பெரும்பள்ளம் அணைக்கட்டிலிருந்து, பாசனத்துக்கு தண்ணீர் தர கலெக்டர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.கீழ்பவானி பாசனத்திட்டத்தில் உள்ள அனைத்து கொப்பு வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்காலை சீரமைத்து கடைமடை வரை நீர்பாசனம் செய்ய பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.தமிழகத்தை ஆறு விவசாய மண்டலங்களாக பிரித்து தமிழகத்தில் அமைய உள்ள சட்டசபை மேலவையில் விவசாய அமைப்புகளுக்கு ஆறு உறுப்பினர் பதவியை அரசு வழங்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நெல் கொள்முதல் நிலையங்கள் மூடல் மஞ்சள் விலை கிடு கிடு**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நெல் உற்பத்தி குறைந்து போனதால், பல கொள்முதல் நிலையம் மூடப்பட்டுள்ளன. மஞ்சளின் அசுர விலை ஏற்றமே, நெல் உற்பத்தி குறைந்து போனதற்கு காரணம்.ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 24 நெல் கொள்முதல் நிலையம் உள்ளன. தமிழக அரசால் நடத்தப்படும் கொள்முதல் நிலையத்துக்கு விவசாயிகளிடமிருந்து நேரடியாகவும், வியாபாரிகள் மூலமாகவும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நெல்லின் ரகத்துக்கு தகுந்தாற் போல, விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

சென்ற பத்து மாதத்ததில் ஈரோடு வட்டாரத்தில் அவல்பூந்துறை கொள்முதல் நிலையத்தில் 1157 மெட்ரிக் டன், எழுமாத்தூர் நிலையத்தில் 3148 மெ.டன், மொடக்குறிச்சியில் 2254 மெ.டன், கொடுமுடி 1ல் 2150 மெ.டன், கொடுமுடி 2ல் 1091 மெ.டன், சிவகிரி 1ல் 2920 மெ.டன், சிவகிரி 2ல் 893 மெ.டன், நசியனூரில் 1280 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. பெருந்துறை வட்டாரத்தில் காஞ்சிக்கோவில் நிலையத்தில் 2230 மெ.டன், வெள்ளோட்டில் 3202 மெ.டன், கே.ஜி.வலசில் 3312 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. கோபி வட்டாரத்தில், கூகலூர் நிலையத்தில் 3310 மெ.டன், கள்ளிப்பட்டியில் 1154 மெ.டன், டி.என்.பாளையத்தில் 2406

மெ.டன், நஞ்சகவுண்டன்பாளையத்தில் 2997 மெ.டன், காசிபாளையத்தில் 2907 மெ.டன், ஒத்தகுதிரையில் 2116 மெ.டன் நெல்லும் கொள்முதலாகி உள்ளன.

பவானி வட்டாரத்தில், பவானி கொள்முதல் நிலையத்தில் 1524 மெ.டன், அம்மாபேட்டையில் 1742 மெ.டன், கவுந்தப்பாடியில் 2621 மெ.டன், அத்தாணியில் 3614 மெ.டன், பி.மேட்டுப்பாளையத்தில் 3126 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டன. சத்தி வட்டாரத்தில் உக்கிரம் நிலையத்தில் 1394 மெ.டன், நாகரணையில் 4310 மெ.டன் நெல்லும் பெறப்பட்டுள்ளன. அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் மொத்தம் 58 ஆயிரத்து 439 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இது சென்றாண்டை விட 16 மெட்ரிக் டன் குறைவு. சென்றாண்டு நெல் உற்பத்தி குறைந்து போனதால், கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து குறைந்திருக்கிறது. மஞ்சளின் அசுர வேக விலை உயர்வுதான் இதற்கு காரணம் என சொல்லப்படுகிறது. மூன்றாண்டுக்கு முன், மஞ்சளின் விலையில் மாற்றம் இல்லை. அதற்கு பின், மஞ்சளின் தேவை அதிகரிப்பு காரணமாக, தங்கத்தின் விலையையும் தாண்டி, மஞ்சள் விலை "கிடு கிடு' வென உயர்ந்தது. மாவட்டத்தில் பரவலாக நெல், கரும்பு, வாழை பயிரிட்ட பல விவசாயிகள் மஞ்சள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டினர்.

கோபி அரக்கன்கோட்டை பாசன பகுதியில் வழக்கமாக நெல் பயிரிடும் விவசாயிகளும் தற்போது மஞ்சளுக்கு மாறியுள்ளனர். இதனால், நெல் உற்பத்தி குறைந்து போய், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வரத்து குறைவாக இருக்கிறது. நெல் வரத்து குறைவாக இருப்பதால், மாவட்டத்தில் செயல்பட்டு வந்த 24 கொள்முதல் நிலையங்களில் 19 நிலையம் மூடப்பட்டன. தற்போது, கோபி வட்டாரத்திலுள்ள நஞ்சகவுண்டன்பாளையம், ஒத்தகுதிரை, பவானி வட்டாரத்தில் அத்தாணி, பெருந்துறையில் காஞ்சிக்கோவில், சத்தியில் உக்கிரம் ஆகிய கொள்முதல் நிலையம் மட்டுமே இயங்கி வருகின்றன.

**ஸ்பிரிங் ரக கோழி விலை சரிவு பண்ணையாளர்கள் அதிர்ச்சி**

சென்னிமலை:பண்ணைகளில் வளர்க்கப்படும் ஸ்பிரிங் ரக கோழி விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் பெரும் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.முட்டை கோழி உற்பத்தியில் வரும் சேவல் குஞ்சுகளை தனியாக பிரித்து விடுகின்றனர். இதை ஸ்பிரிங் ரக கோழிகள் என பண்ணையாளர் அழைக்கின்றனர். சேவல் குஞ்சுகளையும் குறைந்த விலைக்கு வாங்கி, பண்ணை முறையில் அதிகம் பேர் வளர்த்து வருகின்றனர்.ஸ்பிரிங் கோழிகளை வளர்க்கும் பண்ணைகள் காங்கேயம், சென்னிமலை, நத்தக்காடையூர், குண்டடம் போன்ற பகுதிகளில் அதிகளவில் உள்ளது. முட்டை கோழி பொறிப்பகத்தில் இருந்து ஒரு குஞ்சு ஒரு ரூபாய் என குறைந்த விலைக்கு வாங்கி, அதற்கு

தேவையான மருந்து கொடுத்து பண்ணைக்கு கொண்டு வர ஒரு குஞ்சு ஐந்து ரூபாய் வரை விலையாகிறது. பண்ணையில் வைத்து, உரிய தீவனம் கொடுத்து வளர்த்து, நல்ல விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

ஒரு கிலோ எடை கொண்ட கோழியாக வளர 80 நாட்கள் ஆகிறது. அதற்கு தீனி மற்றும் பராமரிப்பு செலவு 55 ரூபாயாகிறது. ஸ்பிரிங் ரக கோழிகள் கிலோ 65 முதல் 70 ரூபாய் வரை விற்பனை ஆகி வந்தது. கோழிகளை வாங்கும் சிலர் கேரளாவில் விற்பனை செய்கின்றனர். தற்போது இந்த கோழிகளை 40 ரூபாய் கொடுத்துதான் வாங்க முன் வருகின்றனர். இதனால், கோழி வளர்த்து வரும் பண்ணையாளர்கள் விலை வீழ்ச்சியால் அவதிப்படுகின்றனர். கோழிகளை விற்பனை செய்யாமல் வைத்திருந்தால் தீனி செலவு அதிகம் பிடிக்கும்; விற்பனை செய்தால் பெரும் நஷ்டம் ஏற்படும் என பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.

விலை வீழ்ச்சிக்கான காரணம் குறித்து மொத்த விற்பனையாளர் ஒருவர் கூறுகையில்,""ஸ்பிரிங்க ரக கோழிகளை வளர்ப்பதன் மூலம் அதிக லாபம் கிடைத்து வந்தது. இதையடுத்து பலர் இந்த தொழிலில் இறங்கி விட்டதால், விலை குறைவுக்கு காரணமாகிவிட்டது. மேலும், சேவல் கோழிகள் தற்போது கர்நாடகா மாநிலத்தில் இருந்தும் வருவதாலும், விலை குறைகிறது. இது கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு பெரும் நஷ்டத்தை கொடுக்கும். சில நாட்களில் மீண்டும் விலை உயர வாய்ப்புகள் உள்ளது,"என்றார்.

**குடோன் இல்லாததால் கொப்பரை கொள்முதல் நிறுத்தம் : பிரச்னைக்கு தீர்வு காண விவசாயிகள் வலியுறுத்தல்**

தஞ்சாவூர்: பட்டுக்கோட்டை பகுதியில் குடோன் வசதியில்லாததால், கொப்பரை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. பிரச்னைக்கு தீர்வு காண பட்டுக்கோட்டை அடுத்த புனல்வாசல் நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் சவரிமுத்து தலைமையில் கலெக்டர் சண்முகத்திடம் மனு அளிக்கப்பட்டது.

அம்மனுவில் உள்ளதாவது:பட்டுக்கோட்டை பகுதியில் பட்டுக்கோட்டை வேளாண் விளைபொருள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் தேங்காய் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதை நாஃபட் நிறுவன குடோனில் பாதுகாத்து மொத்த விற்பனை செய்கின்றனர். ஆண்டுக்கு நான்கு சீசனாக தலா மூன்று மாதம் பிரித்து கொள்முதல் செய்யப்படும்.ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் தலா நான்காயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்படும். தமிழகத்தில் 2009 - 10ம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள 14 கொப்பரை கொள்முதல் நிலையங்கள் மூலம் 27 ஆயிரத்து 446 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.பட்டுக்கோட்டை பகுதியில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைகள்

மூடைகளாக கட்டிவைத்து நாஃபட் குடோனில் அடுக்கி வைக்கப்படுகிறது. கடந்த மூன்று மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்ட மூடைகளில் இரண்டாயிரம் டன் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது தவிர மீதமுள்ள மூடைகள் தேங்கியுள்ளன.

நாஃபட் நிறுவன குடோனில் இடமில்லை.கொள்முதல் செய்தால், அவற்றை பாதுகாப்பாக வைக்க இடமில்லை என குறிப்பிட்டால், ஜூன் 24ம் தேதிக்குப்பின் கொள்முதல் செய்யப்படவில்லை. ஜூன் 30ம் தேதி வரை நான்காயிரம் விவசாயிகள் பட்டுக்கோட்டை வேளாண் விளைபொருள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை அட்டை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த மூன்றாயிரத்து 950 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

எனவே, கொப்பரை கொள்முதல் பாதிக்காத வகையில் குடோன் அமைக்க வேண்டும். முன்னதாக நாஃபட், டேன்ஃபட் மற்றும் முன்னோடி விவசாயிகளை அழைத்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை பெற்று நிறைவேற்ற வேண்டும். கடந்த 2005ம் ஆண்டு இதேபோன்று பிரச்னை எழுந்தபோது, முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதால் முழு அளவில் கொப்பரை கொள்முதல் நடந்தது.இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**குருனை வடிவ யூரியா பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற அழைப்பு**

நாமக்கல்: "பயிர்களுக்கு குருனை வடிவ யூரியாவை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறலாம்' என, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:குருனை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது பயிர் பச்சை பிடிப்பது சிறிது காலதாமதமாவதால், குருனை வடிவ யூரியாவைவிட சாதாரண யூரியாவையே அதிக அளவில் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். ஆனால், குருனை வடிவ யூரியாவில்தான் அதிக பலன் உள்ளது.இரண்டு வகையான யூரியாவிலும் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது. குருனை வடிவ யூரியாவில் உள்ள தழைச்சத்து மிகவும் மெதுவாகவும், சீராகவும் நீண்ட நாட்களுக்கு பயிர்களுக்கு கிடைக்கிறது. அதனால், பயிர் நீண்ட நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும்.

தழைச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகிறது.சாதாரண யூரியாவை மண்ணில் இடும்போது உடனடியாக கரைவதால் தழைச்சத்து நீரின் மூலமகாகவும், ஆவியாதல் மூலமாகவும் வீணாகிறது. குருனை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கிறது.யூரியா குருனை வடிவில் இருப்பதால் பயிர்களுக்கு தெளிப்பது மிகவும் எளிதானது. குருனை வடிவ யூரியாவில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால், கட்டியாவது இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை.குருனை வடிவ யூரியாவை சேமிப்பதற்கும், உபயோகிப்பதற்கும் எந்தவித சிரமமும்

இல்லை. சாதாரண யூரியாவை விட எடை அதிகமாக இருப்பதால், பயிர்களுக்கு இடும்போது காற்று மற்றும் நீரினால் அடித்துச் செல்லப்படுவதில்லை.சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால், இலையின் மேற்பரப்பில் படிந்து பயிர்களுக்கு சேத்ததை ஏற்படுத்துகிறது. அதிக பயன் உள்ள குருனை வடிவ யூரியாவை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று பலன் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சேதப்படுத்தப்பட்ட பி.ஏ.பி., வாய்க்காலை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை**

பொள்ளாச்சி: தென்சித்தூரிலிருந்து ரமண முதலிபுதூருக்கு ரோடு போட்ட போது, சேதப்படுத்தப்பட்ட பி.ஏ.பி., கிளை வாய்க்காலை சீரமைக்க கோரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் நேற்று குறைதீர்ப்பு நாள் முகாம் நடந்தது. இதில், பொள்ளாச்சி வருவாய் கோட்டாட்சியர் அழகிரிசாமியிடம், சோமந்துரை சித்தூரை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன், கொடுத்த மனு:தென்சித்தூர் ஊராட்சியிலிருந்து ரமணமுதலிபுதூருக்கு மண்பாதை கிராம இணைப்பு சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தார் ரோடு போடும் பணி நடக்கிறது. இப்பணியின் போது, பொள்ளாச்சி நீரினைபயன்படுத்துவோர் சங்கத்திற்குட்பட்ட 0.6 பி.ஏ.பி., கிளை வாய்க்கால் சேதமடைந்தது. இது குறித்து இரண்டு மாதங்களுக்கு முன் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்போது, பாசன தண்ணீர் திறக்கப்பட்ட போது வாய்க்கால் சேதமடைந்திருந்தது. இதனால், உயிர் தண்ணீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. வாய்க்காலை உடனடியாக சீரமைத்து, தர வேண்டும். மேலும், ரோடு போடும் பணியால் சாலையும் பைப் லைன் சேதமடைந்துள்ளது. இவற்றையும் சீரமைத்து, தர வேண்டும். வாய்க்காலை உடனடியாக சீரமைக்காவிட்டால், விவசாயிகள் சார்பில் மறியல் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளோம்.இவ்வாறு, மனுவில் கூறப்பட்டுள்ளது.

**தக்காளி விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை**

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதிகளில் தக்காளி நாற்று நடவு செய்யும் விவசாயிகள் நுண்ணுயிரை தெளிக்க வேண்டும் என வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. கிணத்துக்கடவு மற்றும் செட்டியக்காபாளையம், நல்லட்டிபாளையம், கோவிந்தாபுரம், வடபுதூர், முத்துக்கவுண்டனூர், வீரப்பகவுண்டனூர் உட்பட 72 கிராமங்களில் உள்ள 600 ஹெக்டேர் பரப்பில் தக்காளி நடவு செய்வதற்கு விவசாயிகள் தயாராகியுள்ளனர். கிணத்துக்கடவு வேளாண்மை உதவிஇயக்குனர் மனோகரன் கூறியதாவது: தக்காளி நாற்று நடவு செய்வதற்கு முன்பு, பாத்திகளில் உள்ள தக்காளி நாற்றுகளை எடுத்து, ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ அசோக்பைரில்லம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியாவை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்த

கரைசலில், நாற்றுகளின் வேர்ப்பகுதியை நனைத்து நடவு செய்ய வேண்டும். அப்போது தக்காளிச்செடிக்கு தேவையான தழைச்சத்து மற்றும் மணிச்சத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் 20 சதவீதம் உரச் செலவுகளை குறைக்கலாம்.

இவ்வாறு செய்யம்போது, தக்காளிச் செடியின் காய்ப்புத்திறன் அதிகரிக்கிறது. இதை தாக்ககூடிய பச்சைப்புழு, பழுப்பு நோய், இலைப்புள்ளி நோய் போன்றவைகளையும் கட்டுப்படுத்துகிறது. இந்த அசோக்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள் கிணத்துக்கடவு வேளாண்மை விரிக்க மையத்தில் கிடைக்கிறது. இதனை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த வேண்டும் என்றார்.

**கொப்பரை ஏலம் கிலோ ரூ.32.75**

பொள்ளாச்சி: ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 32.75 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 45 பேர் 118 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை நான்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 69 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 30.75 ரூபாய் முதல் அதிகபட்சமாக 32.75 ரூபாய் வரை விலை கிடைத்தது.

இரண்டாம் தர கொப்பரை 49 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 26.55 ரூபாய் முதல் அதிகபட்சமாக 30.25 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை ஏலத்திற்கு கடந்த வாரத்தை விட கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது. கொப்பரை விலையும் கிலோவுக்கு 50 பைசா உயர்ந்துள்ளது. ஆனைமலை சுற்றுப்பகுதியில் மழை பெய்வதால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விலை உயர்ந்து வருகிறது' என்றனர்.

**குறைந்த விலையில் உரம் விதைப்பு கருவி**

குஜிலியம்பாறை : விவசாயிகளுக்கு எளிய முறையில், குறைந்த விØ லயிலான, "உரம் விதைப்பு கருவி' வேளாண் மையங்களில் விற்பனைக்கு உள்ளதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாய நிலங்களில், உரம் விதைப்பு செய்வதற்கான எளிய முறை கருவியை கோவை வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியது. இந்த கருவியை பயன்படுத்தி, டி.ஏ. பி., சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங் களை அடியுரமாக, சீராக இடமுடியுமென வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும், கருவியை பயன்படுத்தி உரமிடுவதன் மூலம் நேரமும், உர செலவும் மிச்சமாகிறது.குறைந்த விலையில், எளிய முறையில், விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இக்கருவி இருந்ததால், அனைத்து வேளாண் மையங்களிலும் குறைந்த விலைக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளை சந்தித்து, அதிகாரிகள் செயல் விளக்கமும் செய்து காண் பிக்கின்றனர். குறைந்த விலையிலான, உரம் விதைப்பு கருவி தேவைப்படுவோர் அந்தந்த வேளாண் மையங் களை தொடர்பு கொள்ளுமாறு குஜிலியம்பாறை வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி கேட்டுக் கொண் டுள்ளார்.

**கண்காட்சியில் தேங்காய் மட்டை மெழுகுவர்த்தி**

மதுரை:மதுரை காந்தி மியூசியத்தில் தேசிய கைவினைப்பொருள் அபிவிருத்தி ஆணையம் சார்பில், அகில இந்திய கைவினைப் பொருட்களின் கண்காட்சி நடக்கிறது. மதுரை சிப்போஏற்பாடுகளைச் செய்துள்ளது.

துணி மற்றும் சணலில் செய்த பரதமாடும் பெண் பொம்மைகள், இசைக்கருவியை மீட்டும் மீரா, ஆதிகால மனிதனைப் போன்ற பொம்மைகள் கோல்கட்டாவிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. நாகாலாந்து, லக்னோவில் உலர் பூக்கள், பூங்கொத்துக்கள், அசாம், மேற்குவங்கம், அரியானாவின் சணல் ஹேண்ட்பேக், பர்ஸ், சுவர்த் தோரணங்கள், காலணிகள், வெட்டிவேரில் தயாரிக்கப்பட்ட காலணிகள் விற்பனைக்குள்ளன.கேரள மூங்கில், பிரம்பு நாற்காலிகள், ஊஞ்சல்கள், பல்வேறு மாநிலங்களின் எம்பிராய்டரி வேலைப்பாடுடன் கூடிய சுரிதார், சேலைகள், குழந்தைகளுக்கான ரெடிமேட் ஆடைகள், கல்வேலைப்பாடு நகைகள், பேஷன் நகைகள் பெண்களை கவர்கின்றன. வீடுகளை அலங்கரிக்கும் மரச்சிற்பங்கள், தஞ்சை ஓவியங்கள், வெல்வெட் துணியில் ஆயில் பெயின்டிங்கில் கீதோபதேசம், சணல், மூங்கில், உலர் பூக்களின் சுவர்த் தோரணங்கள், டெரகோட்டா பொம்மைகள், பர் பொம்மைகள் ஸ்டால்களில் இடம்பெற்றுள்ளன.

**புதுமை :** தேங்காய் மட்டையின் நடுப்பகுதியில் மெழுகை ஊற்றி, அதன் மேல் இயற்கை இலை மற்றும் பூக்களை ஒட்டி அலங்கரித்துள்ளனர். மைக்ரோஓவனுக்கு பயன்படுத்தும் செராமிக்

பாத்திரங்கள், அலங்கார "செட்'கள் விற்பனைக்குள்ளன.கண்காட்சி ஜூலை 20 ம்தேதி வரை, காலை 10 முதல் இரவு 9 மணி வரை நடக்கிறது. அனுமதி இலவசம்.

**வேளாண் தொழில்நுட்ப ஆலோசனைப் பயிற்சி**

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரியில், மண்பாசன நீர் மற்றும் உரப்பரிசோதனை குறித்த வேளாண் தொழில் நுட்ப ஆலோசனை பயிற்சி ஜூலை 16 வரை (காலை 10 முதல் மாலை 4 மணி) நடக்கிறது. வேளாண் ஆலோசனை மையம் அமைக்க விரும்புவோர், சர்க்கரை ஆலை ஆய்வுக்கூட அலுவலர்கள், வேளாண் தொழில் சார்ந்த நிறுவன உறுப்பினர்கள் பங்கேற்கலாம். குறைந்தபட்சம் பிளஸ் 2 முடித்தவர்கள் பயிற்சியில் பங்கேற்கலாம்.மேலும் விவரங்களுக்கு மண்ணியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முகமது ஹாருனை, 94865 01060ல் தொடர்பு கொள்ளலாம்.

**பழவூர் பிர்காவில் பயிர், மக்களை காப்பாற்ற பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர்**

திருநெல்வேலி : ராதாபுரம் கால்வாய் பாசனத்திற்கு பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடவேண்டும் என பாசன விவசாயிகள் கலெக்டரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து ஆவரைக்குளம் பாசன விவசாயி மனோகரன் மற்றும் விவசாயிகள் அளித்துள்ள மனு: ராதாபுரம் வட்டம் பழவூர் பிர்கா பகுதியில் பருவமழை சரிவர இல்லாததால் அப்பகுதி வறண்டுள்ளது. தற்போது பெய்துவரும் தென்மேற்கு பருவமழையும் சிறிதும் பெய்யவில்லை. இதனால் கிணறுகள் வறண்டு போய் உள்ளது.

பாசனத்திற்கு தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகிவிடும் ஆபத்தான நிலையில் உள்ளது. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குடிநீருக்கு பொதுமக்களும், கால்நடைகளும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். நல்ல காற்று வீசுவதால் அதிக மின் உற்பத்தி கிடைக்கிறது. மிகவும் பின்தங்கிய பகுதியான ராதாபுரம் பழவூர் பிர்கா பகுதியில் பயிர்களை காப்பாற்றவும், மக்கள் மற்றும் கால்நடைகள் குடிநீருக்கு கஷ்டப்படாமலும் இருக்க பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

**அரியலூரில் ஜூலை 16ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர்: அரியலூரில் வருகிற 16ம் தேதி விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது.இதுபற்றி அரியலூர் மாவட்ட கலெக்டர் ஆபிரகாம் விடுத்த அறிக்கை:அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வருகிற 16ம் தேதி காலை 11 மணிக்கு, அரியலூர் தாலுகா அலுவலக கூட்ட அரங்கத்தில் நடக்கிறது.இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தப்பட்ட நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் விவாதிக்கப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**பாலக்காடு அருகே மாட்டுத்தீவன தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா**

*பாலக்காடு,ஜூலை.13–*

*பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோட்டை அடுத்த முதலமடையில் மாட்டுத்தீவன தொழிற்சாலை அமைக்க அரசு முடிவு செய்தது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு செந்தாமரைட்சன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். விழாவில் கேரள உணவுத்துறை மந்திரி திவாகரன் கலந்து கொண்டு அடிக்கலை நாட்டினார்.*

*பின்னர் அவர் பேசும் போது:– ஓணம் பண்டிகையையொட்டி மாநில அரசு குடும்ப பென்சன், ஓய்வூதியர்களுக்கு பணத்தை உயர்த்தி தர மந்திரி சபை கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்றார். விழாவில் பாலக்காடு பஞ்சாயத்து தலைவி சுபைதா ஈசாக், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் கண்டுமுத்தன், டாக்டர் சுரேஷ்குமார் ஆகியோர் உள்பட பலர் பேசினார்கள்.*

**பட்டான்சேரி கிராமத்தில் விவசாயிகளுக்கு இலவச மருந்து தெளிப்பான்**

*பாலக்காடு,ஜூலை.13–*

*பாலக்காடு மாவட்டம், பட்டன்சேரி கிராம பஞ்சாயத்து சார்பில் நிரந்தரமாக நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இலவச பூச்சிக்கொல்லி மருந்து, மருந்து தெளிப்பான் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் பட்டன்சேரி துணைத்தலைவர் சிவதாஸ், விவசாயிகளுக்கு மருந்து தெளிப்பான், இலவச பூச்சி மருந்து ஆகியவற்றை வழங்கினார்.*

இந்த நிகழ்ச்சியில், விவசாயத்துறை அதிகாரி என்.ஆர்.முரளி, மாவட்ட உதவி விவசாய அதிகாரி அணில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**நடப்பு ஆண்டு க ப் பருவத்தில் நாட்டின் மஞ்சள் உற்பத்தி 150 சதவீதம் உயர வாய்ப்பு**



அருண் ஐயர்

பெங்களூர்

நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்), நம் நாட்டில் மஞ்சள் உற்பத்தி 30 லட்சம் முதல் 35 லட்சம் மூட்டைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 12–14 லட்சம் மூட்டைகளாக இருந்தது. ஆக, நடப்பு பருவத்தில் மஞ்சள் உற்பத்தி சுமார் 150 சதவீதம் உயரும் என அண்மைக் கால மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில்...

தமிழ்நாட்டில், நடப்பு கரீஃப் பருவத்தில், ஈரோடு, கோபிசெட்டிபாளையம், கொடுமுடி மற்றும் பண்ணாரி ஆகிய இடங்களில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு கணிசமாக அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மொத்தத்தில், ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பருவத்தில், மஞ்சள் சாகுபடி பரப்பளவு 25–30 சதவீதம் அதிகரிக்கும் என்று தெரிகிறது.

பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருவதால், மஞ்சள் உற்பத்தியும் சிறப்பான அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீடுகளால், மஞ்சள் விலை குறிப்பிடத்தக்க அளவிற்கு குறையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், சென்ற ஆண்டைப் போல் பருவமழை ஏமாற்றமளித்தால், அது உற்பத்தியிலும், விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

விலை குறையலாம்

*சில மாதங்களுக்கு முன்னர், நடப்பு சந்தையில் ஒரு குவிண்டால் (100 கிலோ) மஞ்சள் விலை ரூ.17,000 என்ற அளவை எட்டியது. இது, தற்போது ரூ.14,000–14,800 என்ற அளவில் உள்ளது. முன்பேர வர்த்தக சந்தைகளிலும் விலை சரிவடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேலும், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களிடம் மஞ்சள் கையிருப்பு அதிக அளவில் உள்ளது. உதாரணமாக, தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த மஞ்சள் விவசாயிகள் மற்றும் வணிகர்களிடம், மஞ்சள் கையிருப்பு சென்ற ஆண்டைக் காட்டிலும் 30 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக தெரிகிறது. இதனாலும் மஞ்சள் விலை குறையும் நிலை உருவாகி உள்ளது.*

*மஞ்சள் பயிரிடுவதால் விவசாயிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கிறது. ஒரு மூட்டை மஞ்சள் விலை ரூ.8,000–த்தை தாண்டினால், விவசாயிகளால் லாபம் ஈட்ட முடியும். ஒரு ஏக்கர் நிலத்தில் மஞ்சளை பயிரிடுவதால், தற்போதுள்ள விலையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு சுமார் ரூ.1 லட்சம் லாபம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.*

*இந்தியாவின் மஞ்சளுக்கு ஜப்பானிலும், துபாய் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த நாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து, மஞ்சள் ஏற்றுமதி வேகம் எடுத்தாலொழிய நடப்பாண்டில் மஞ்சளுக்கு சிறப்பான விலை கிடைக்க வாய்ப்பில்லை என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.*